பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28 அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: டாக்டர். இரா.செல்வராஜ்., இ.ஆ.ப.,

ந.க.எண். 8487/2019/அ6 நாள்: 22.01.2022

பொருள்: கருணை அடிப்படையில் பணிநியமனம் – பேரூராட்சிகள் நிர்வாகம் – தஞ்சாவூர் மண்டலம் – நாகப்பட்டினம் மாவட்டம் – மணல்மேடு பேரூராட்சியில் செயல் அலுவலராகப் பணிபுரிந்து பணியிடைக் காலமான சிவக்குமார் (திரு).ஜெ. – என்பவரின் வாரிசுதாரர் (ம) மனைவி பாமா(திருமதி) பி. – கருணை அடிப்படையில் மணல்மேடு பேரூராட்சியில் 27.12.2018 ஆம் நாள் முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தது – இளநிலை உதவியாளர் பணிநிலையில் ஓராண்டு பணி பூர்த்தி செய்தது– பணிவரன்முறை செய்தல் – தொடர்பாக.

பார்வை:
1. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவரின் கடித ந.க.எண்.2566/2018/பேரூ.2 , நாள்.26.12.2018.
2. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவரின் கடித ந.க.எண்.2566/2018/பேரூ.2 நாள்.25.06.2019.
3. இவ்வியக்கக கடிதம் ந.க.எண்.8487/2019/அ9, நாள்.05.08.2019 மற்றும் 31.03.2021
4. அரசு கடித(ப) எண்.20142/பேரூ.1/2019–1, நாள்.22.11.2021
5. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021.

********

ஆணை:

தஞ்சாவூர் மண்டலம், நாகப்பட்டினம் மாவட்டம், மணல்மேடு பேரூராட்சியில் செயல் அலுவலராகப் பணிபுரிந்து 07.09.2018–ல் பணியிடை காலமான திரு. ஜெ. சிவக்குமார் என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி.பி.பாமா என்பவருக்கு கருணை அடிப்படையில் பார்வை 1–ல் காணும் நடவடிக்கைகளின் படி மணல்மேடு பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு 27.12.2018 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக பார்வை 2–ல் காணும் கடிதத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட தனியரது பணியினை வரன்முறை செய்ய வரப்பெற்ற கருத்துருவினை பார்வை 3–ல் காணும் இவ்வியக்கக கடிதம் மூலம் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பார்வை 4–ல் காணும் அரசு கடிதத்தில் அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021–ல் வெளியிடப்பட்ட வழிமுறைகளின் படி நியமன அலுவலருக்கு ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற பேரூராட்சிகளின் ஆணையாளரே இந்நேர்வில் பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாகப்பட்டினம் மாவட்டம், மணல்மேடு பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.பி.பாமா என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான கலம் 5-ல் காணும் நாள் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

| வ. எ | பணியாளர் பெயர்/ பணியின் நிலை | பணிபுரியும் பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணியினை வரன்முறைப்படுத்திய நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திருமதி.பி.பாமா இளநிலை உதவியாளர் | மணல்மேடு பேரூராட்சி | 27.12.2018 மு.ப | 27.12.2018 மு.ப |

மேலும் தனியரின் பணிப்பதிவேட்டில் இப்பொருள் தொடர்பாக உரிய பதிவுகளை மேற்கொள்ளவும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான பதிவேட்டின் நகலினை அனுப்பிடவும் தஞ்சாவூர் மண்டல பேரூராட்களின் உதவி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

பேரூராட்சிகளின் ஆணையர்

பெறுநர்:
திருமதி.பி.பாமா
இளநிலை உதவியாளர்,
மணல்மேடு பேரூராட்சி.
(தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வாயிலாக)

நகல்:
1. மாவட்ட ஆட்சித்தலைவர், நாகப்பட்டினம் மாவட்டம்
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம்
3. செயல் அலுவலர், மணல்மேடு பேரூராட்சி
4. அ6 இருப்புப் கோப்பு

ந.க.எண். 2566/2018 பேரூ.2
நாள். .02.2022.

பேரூராட்சிகள் உதவி இயக்ககம்,
தஞ்சாவூர் மண்டலம்,
மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர்.

உரியவருக்கு சார்வு செய்யப்படுகிறது

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
தஞ்சாவூர் மண்டலம்.

பெறுநர்
திருமதி. பி. பாமா, இளநிலை உதவியாளர்,
வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி,
மயிலாடுதுறை மாவட்டம் (செயல் அலுவலர் மூலமாக)